1975 ஏப்ரல் 18]

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள் 719, 720 ஒத்தி வைக்கப்படுகின்றன.

Harijan Welfare Schools.

* 678 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether the Harijan Welfare Schools in rural areas of the State particularly elementary sections work with slender attendance during the agricultural season?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : ஆம். சில அரிசன நலப் பள்ளிகளில் மட்டும்தான்.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், அறுவடை வேலை நடைபெறும் காலங்களில் அரிசனப் பள்ளிகளில் அரிசன மாணவர்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அரசு ஆராய்ந்ததா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : அறுவடைக் காலங்களிலே சிறு குழந்தைகளைப் பாதுகாப்பதற்காக அதைக் கவனிக்கக்கூடிய குழந்தைகளை வீட்டிலேயே தாய் தந்தையர்கள் விட்டுவிடுகிறார்கள். அதனால் அவர்கள் பள்ளிக்கு வருவதில்லை. சில தாய் தந்தையர்கள் அந்தப் பிள்ளைகளையே அறுவடைக் காலங்களில் அழைத்துச் சென்று விடுகிறார்கள், இது வழக்கமாக இருந்துவருகிற ஒன்று. சில மாவட்டங்களிலே சில நேரங்களிலே இப்படிப்பட்ட அறுவடை காலங்களிலே இப்படிப்பட்ட நிலை 15 நாட்கள் லீவு விடுகிறார்கள். அதிலே தென் ஆர்க்காடு மாவட்டத்திலே இது அதிகம்.

திரு. எம். சுரேந்திரன் : சார், அறுவடைக் காலங்களிலே இம் மாதிரிக் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வது குறைகிறது என்பது வெகு நாளாக நடந்துவருகிற ஒன்று என்று அமைச்சர் சொன்னார். அதற்காக அவர் சொன்ன காரணம் வேறு மாதிரியாக இருக்கிறது. உழவடை செய்கின்றவர்களுக்கு அவர்களுக்குக் கிடைக்கின்ற வருவாய்

அதிகப்படுகிற முறையில் அவர்களுடைய குழந்தைகளையும் வருவாய் சம்பாதிப்பதற்காக அழைத்துச் செல்கிறார்கள். ஆகவே அந்தக் குழந்தைகளுக்கு வேறு வருவாய் தரக்கூடிய முறையிலே வழியை அரசாங்கம் செய்தால் அப்படி அவர்கள் போகாமல் பள்ளிக்குச் செல்வார்கள் அல்லவா? ஆகவே அந்த முறையிலே ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது நல்ல யோசனைதான். இப்போது அரசாங்கம் அந்த முடிவிற்கு வரவில்லை. வேண்டுமென்றால் நிதி நிலைகள் நாட்டின் நிலைகள் எல்லாம் ஆராய்ந்து—இது சாதாரணமாக நினைப்பதுதான்—ஆனால் திட்டம் பெரிது, ஆகவே இது அரசாங்கம் கொள்கையாக ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று.

திரு. ஆ. கு. சுப்பையா: அறுவடைக் காலங்களில் சிறு குழந்தைகளை வைத்துக்கொள்வதற்காகப் பெரிய குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் வைத்துக்கொள்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு பால்வாடிகளை நிறைய அமைத்துப் பாலர் பள்ளிகளை அமைத்துக்கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: இப்போதே பால்வாடிகள் என்ற பாலர் பள்ளிகள் நடந்துகொண்டு வருகின்றன. 2, 3 வயது குழந்தைகள் எல்லாம் பராமரிக்கப்படுகிறார்கள். எங்கள் காலனியிலேயே எடுத்துக்கொண்டால் 500 குடும்பங்கள் இருக்கின்றன, அதிலே கிட்டத்தட்ட இருநூற்றுக்கும் அதிகமான குழந்தைகள் இருக்கிறார்கள், அவர்களைக் கொண்டு பால்வாடியில் வைக்க இடம் இல்லை. 30, 40 பேர்கள்தான் வைக்கமுடியும், அதற்கு மேல் முடியவில்லை. அதை அதிகரிக்கும்போது அந்த எண்ணத்தை அரசு பூர்த்தி செய்யும்.

டாக்டர் ச. அ. சின்னராஜ்: தலைவர் அவர்களே, அறுவடைக் காலங்களிலே குழந்தைகளைப் பராமரிப்பதற்குக் குழந்தைகளையே விட்டுவிடுகிறார்கள், அதனால் அவர்கள் பள்ளிகளுக்குச் செல்வதில்லை என்று அமைச்சர் சொன்னார்கள். தொழிற்சாலைகளிலே வேலை செய்கிற பெண்கள் குழந்தைகளை விட்டுச் செல்ல கிரஷே வைத்திருக்கிறார்கள், அதுபோன்று அறுவடைக் காலங்களிலே எல்லா இடங்களிலேயும் குழந்தைகளைப் பாதுகாக்கிற முறையில் கிரஷே வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

1975 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : தலைவர் அவர்களே, அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. என். கே. பழனிசாமி : சார், அரிசனங்கள் மாத்திரமல்ல, மற்றவர்களும் விவசாயப் பகுதிகளிலே இருக்கிறவர்கள் எல்லாம் பள்ளிகளுக்குச் செல்வதில்லை. அங்கே வாத்தியார்தான் உட்கார்ந்து கொண்டிருப்பார். ஆகவே, அந்த ஸ்கூல் டைமை மாற்றியமைத்து பார்ட் டைம் ஸ்கூலாக மாற்றியமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : ஆண்டிலே இது 15 நாட்களுக்குத்தான் இருக்கிறது. 220 நாட்களிலே ஆண்டிலே 15 நாட்கள் தான் வருகிறது, அந்த நாட்களில் பொதுவாக விடுமுறை வேறு விட்டு விடுகிறார்கள். ஆகவே 15 நாட்களுக்காக ஷிப்ட் சிஸ்டம் என்று வைத்தால் அது பெரிய குழப்பத்தை ஏற்படுத்தும். ஒரு சில மாவட்டங்களில்தான் இப்போது அந்த நிலைமை இருக்கிறது. பிறகு அந்த நிலைமை எல்லா மாவட்டங்களுக்கும் வரவேண்டிய நிலைமை வந்து விடும்.

அரிசன மாணவர் இல்லங்கள்

* 679. வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், ஊத்துக்கோட்டையிலும், கும்முடிப்பூண்டியிலும் அமைந்துள்ள அரிசன மாணவர் இல்லங்களுக்குச் சொந்தக் கட்டடம் அமைக்கும் செயற்குறிப்பு காலதாமதம் ஆவதேன்?

(இ) இவை எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : (அ) & (இ) தற்போது, அரிசன மாணவ மாணவியர் இல்லங்களுக்குச் சொந்தக் கட்டிடம் கட்டும் திட்டம் அரிசன வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகத்தினுல் படிக்கிரமப்படி செயல் படுத்தப்படுகின்றது. இதன்படி 1974–75-ம் ஆண்டில் 100 இடங்களில் அரிசன மாணவ மாணவி இல்லங்களுக்குச் சொந்தக் கட்டிடம் கட்ட நடவடிக்கை மேற்படி கழகம் எடுத்து வருகின்றது. இதில் வினுவில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு இல்லங்கள் சேர்க்கப்படவில்லை. ஆகவே, இவ்விரு இல்லங்களை இந்தத் திட்டத்தின் காலக்கிரமத்தில் சேர்த்துக் கொள்ளும்படி கழகம் கேட்டுக் கொள்ளப்படும்.